**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-06-2023**

**விருதுநகர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-06-24 | 2023-06-25 | 2023-06-26 | 2023-06-27 | 2023-06-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 3.0 | 0.0 | 3.0 | 18.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 38.0 | 38.0 | 37.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 24.0 | 24.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14 | 16 | 14 | 12 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 250 | 250 | 230 | 250 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 7 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் மிதமான முதல் மிக அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களில் லேசான முதல் மிதமான மழை என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37.0°C முதல் 39.0°C ஆகவும், குறைந்தபட்ச 23.0°C முதல் 25.0°C காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரகாற்றின் வேகம் மணிக்கு 12.0 முதல் 16.0 கி.மீ வரை இருக்கும் என்றும் காற்றின் திசை மேற்கு தென்மேற்கு திசையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பொது ஆலோசனை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நாட்களில் மழை பெய்யும். எனவே, மழைநீரை மண்ணில் சேமித்து வைக்க விவசாயிகள் உழவுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறுவடை செய்யப்பட்ட பொருட்களை காற்று புகாத இடங்களில் வைத்து பூஞ்சை தாக்காமல் பாதுகாக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

லேசானது முதல் மிதமான மழை. மழைநீரை மண்ணில் சேமித்து வைக்க விவசாயிகள் உழவுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| எள் ( கிங்கேல்லி / டில்) | குருத்து இலைப்பிணைக்கும் புழு: தாக்குதலின் அறிகுறிகள்: 1.இளம் புழு இலையைப் பிண்ணி பிணைத்துக் கொண்டு அதனுள்ளிருந்து இலைகளையும், இளம் குருத்துகளையும் உண்டு சேதப்படுத்தும். 2.வளர்ச்சியடைந்த புழு மொக்கு மற்றும் காய்களை துளைத்து சென்று உண்டு சேதப்படுத்தும். பூச்சியின் விபரம்: 1. புழு: இளம் பச்சை நிறத்திலிருக்கும், தலை கருமையாகவும், உடலின் மேற்பரப்பில் வெண்மை நிற ரோமங்கள் காணப்படும் 2. அந்துப்பூச்சி: அந்துப்பூச்சி மிகவும் சிறியது, இளம் சிகப்பு கலந்த மஞ்சள் நிறத்திலிருக்கும். கட்டுபடுத்தும் முறை: பின்வரும் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும் 1.வேப்பங் கொட்டை சாறு (5%), 2. வேப்ப எண்ணெய் இரண்டு முறை) 2% என்ற அளவில் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மாம்பழம் | ‘மா’ பறவைக் கண் நோய் மற்றும் பழ அழுகல் நோய்: அறிகுறிகள்: சாம்பல் நிற வட்ட வடிவ புள்ளிகள் இலைகளில் தோன்றும். இப்புள்ளிகளைச் சுற்றிலும் பழுப்பு நிறத்தில் எல்லைக்கோடு தோன்றி இருக்கும். 1. இப்புள்ளிகளை உற்று நோக்கும் போது சிறிய கருப்பு நிற ‘அசர்வுலை’ என்ற பூஞ்சாண வித்துத்திறன்கள் தென்படும்.2. பின் கருகல் அறிகுறிகள் இலைகளில் தென்படும்.3. பூக்கள் மற்றும் பிஞ்சுகள் கருகிவிடும். 4. பழத்தில் கீரள்கள் தென்படலாம். 5. பழங்களில் |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | கண்ணீர் திவலைகள் வடிந்தது போல் திட்டுகள் காணப்படும்.6. பழங்களில் கருமை நிற புள்ளிகள் உள் சதைப் பகுதிகளில் தோன்றி, பழங்கள் முற்றிலுமாக அழுகும் நிலையை அடையலாம்.நோய்மேலாண்மை முறைகள்:1. இந்த பூஞ்சாண நோய்க்காரணி வயல்களிலுருந்து சேமிப்பு கிடங்குகளுக்கு பரவுவதால் மா தோட்டத்தில் குப்பைகள் சேதராவண்ணம் சுத்தமாக பராமரித்தல் அவசியம். மாத்தோட்டத்தில் மரங்களுக்கு இடையே புல் மற்றும் களைச்செடிகள் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். 2. இலைப்புள்ளி மற்றும் பின் கருகல் அறிகுறிகள் பொருளாதாரச் சேத நிலையைத் தாண்டும்பொழுது கார்பன்டாசிம்+ மேங்கோசெப் கலந்த மருந்தினை (0.25%) என்ற அளவில் நோயின் தீவிரத்தைப் பொறுத்து தெளித்து பயனுறலாம்.3. பழங்களை சேமிப்பு கிடங்குகளுக்கு கொண்டு செல்வதற்கு முன்னால் சுடு தண்ணீரில் (55°C) 15 நிமிடங்கள் மூழ்கவைத்து சுத்தப்படுத்தலாம். அல்லது பீனோமைல் (500ppm) என்ற ஊடுருவிப் பாயும் பூஞ்சாணக் கொல்லியில் 5 நிமிடங்கள் மூழ்க வைத்து பின்னர் பழங்களை சேமிப்பு கிடங்குகளுக்கு கொண்டு செல்லலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| செம்மறி ஆடு | துள்ளுமாரி நோய்: செம்மறி மற்றும் வெள்ளாடுகளில் நுண்ணுயிரியால் ஏற்படக்கூடிய இக்கொடிய நோய் இளம் செம்மறி ஆட்டுக்குட்டிகளில் அதிக உயிர் இழப்பை ஏற்படுத்துகிறது. அறிகுறிகள்: இளம் செம்மறி குட்டிகளில் திடீர் உயிர் இழப்பு மற்றும் பாதிக்கப்பட்ட மற்ற ஆடுகளில் தீவனம் உட்கொள்ளாமை, வலியுடன் கூடிய வயிற்றுப்போக்கு, மூச்சு விடுவதில் சிரமம், வலிப்பு போன்ற அறிகுறிகள் தென்படும். சிகிச்சை: பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு நோயின் ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து தகுந்த நோய் எதிர் உயிரி மருந்து தெலுத்தவேண்டும். தடுப்புமுறைகள்: 1. வருடந்தோறும் மழைக்காலத்திற்கு முன்னர் முறையாக தடுப்பூசி போடவேண்டும். இளம் செம்மறி குட்டிகளுக்கு முதல் தடுப்பூசி 6-வார வயதில் செலுத்த வேண்டும்.2. மழைக்காலத்திற்கு பின்னர் தழைக்கும் இளம் புற்கள் கொண்ட மேய்ச்சல் நிலங்களில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்க கூடாது. 3. தீவனங்களில் |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | திடீர் மாற்றம் செய்வதை தவிர்க்க வேண்டும். 4. நார்சத்து குறைந்த அடர் தீவனத்தை அதிக அளவு கொடுப்பதை தவிர்க்க வேண்டும். |
| பசு | கறவை மாடுகளில் ஏற்படும் மடிவீக்க நோய் : அதிக பால் கறக்கும் கறவை மாடுகளில் சுகாதார மின்மை காரணமாக, பாக்டீரியா உள்ளிட்ட நோய்க் கிருமிகளின் தொற்றால் மடிவீக்கம் ஏற்படுகிறது. இதற்குதீர்வாக பின்வரும் மரபு வழி மருத்துவ முறையை கறவை மாடு வளர்ப்போர் பின்பற்றலாம். 1. சோற்றுக்கற்றாழை- 250 கிராம் (ஒரு முழம் தோல் நீக்காமல்). 2. மஞ்சள்தூள் - 50 கிராம் (இரண்டு கைப்பிடி அளவு) 3. சுண்ணாம்பு -12கிராம் (ஒரு கொட்டைப் பாக்கு அளவு) மேற்கண்ட பொருட்களை ஒன்றாக அரைத்து, அரைத்த விழுதில் ஒரு கையளவு எடுத்து அதனுடன் ஓர் டம்ளர் தண்ணீர் சேர்த்து மாடுகளின் மடியில் நன்கு தடவ வேண்டும். இச்சிகிச்சையை 3-5 நாட்களுக்கு தொடர்ந்து செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் மருந்து கலவையை புதிதாக அரைத்து பயன்படுத்த வேண்டும். |